26.07.2023

O.S. No.158/2021

D.W. 2 Madhaiyan

Deposition of witness for the D.W.2 solemnly affirmed by Tmt.A.M.Arulmathi, Gr.I. Bench Clerk of this court on 26.07.2023 in accordance with Provisions X of Evidence Act 1872.

**குறுக்கு விசாரணை :**

ஜெயகுமார் என்னை என்று அழைத்து சென்றார் என்றால் ராமன்தான் என்னை அழைத்து சென்றார். தேதி நினைவில்லை. போச்சம்பள்ளி வழக்குரைஞரிடம் அழைத்து சென்றார். அந்த வழக்குரைஞரின் விலாசம் எனக்கு தெரியாது. என்னை அழைத்து சென்ற பிறகு ஸ்டாம்ப் பேப்பர் எதுவும் வாங்கவில்லை. அதற்கு முன்பே ராமன் கையில் வைத்திருந்தார். நானும், ராமனும்தான் போனோம். ராமன் வழக்கின் ஸ்டாம் பேப்பர் மற்றும் பழைய பத்திரம் ஆகியவற்றை வழக்குரைஞரிடம் கொடுத்தார். தாளில் எழுதி படித்து பார்த்தார்கள். அதற்கு பிற்பாடு பத்திரத்தில் எழுதினார்கள். தாளில் எழுதும் போதும், பத்திரத்தில் பூர்த்தி செய்தபோதும் நாங்கள் இருவரும் உடன் இருந்தோம். பூர்த்தி செய்த பிறகு படித்து காட்டினார்கள். அதன்பிறகு ராமன் கையெழுத்து போட்டார். அதற்கு பிற்பாடு நான் கையெழுத்து போட்டேன். அதற்கு பிற்பாடு ராமனுக்கு தெரிந்தவர்கள் வந்தார்கள். அவர்கள் இருவரும் கையெழுத்து போட்டார்கள். ராமன் எந்த மொழியில் கையெழுத்து போட்டார் என்று சொல்ல முடியுமா என்றால் அது எனக்கு தெரியவில்லை. ராமன் என்ன மாதிரி கையெழுத்து போட்டார் என்று

நான் குறிப்பாக பார்க்காததால்தான் என்னால் சொல்ல இயலவில்லை என்றால் சரியல்ல. எனக்கு முன்பாக நின்று கையெழுத்து போட்டார். மற்ற இருவர் தமிழில் கையெழுத்து போட்டனர். அதற்கு பிற்பாடு வக்கில் கையெழுத்து போட்டார். அன்றையதினமே ரிஜிஸ்டர் ஆபிஸ் போனோம். மற்ற இருவரை யார் வரவழைத்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. அவர்களையும் ராமன்தான் வரவழைத்தார். நான் கையெழுத்து போட்டு சுமார் 5 நிமிடம் கழித்து அவர்கள் இருவரும் வந்தனர். அதனால் ராமன் கையெழுத்து போட்டதை அவர்கள் பார்க்கவில்லை என்றால் சரிதான். சாட்சி வாக்குமூலம் தயாரிக்க ஜெயகுமார்தான் என்னை வழக்குரைஞரிடம் அழைத்து போனார். ஜெயகுமாரை எனக்கு சிறு வயதிலிருந்தே தெரியும். ராமன் அவருக்கு இரண்டு பெண்கள் இருக்கும் சங்கதியை என்னிடம் சொன்னாரா என்றால் சொல்லவில்லை. அவருடைய மனைவி பற்றியும் எந்த தகவலும் சொல்லவில்லை. என்ன காரணத்திற்காக ராமன் பத்திரம் எழுதுகிறார் என்று என்னிடம் சொன்னாரா என்றால் அவருக்கு வயதாகிவிட்டதால், இருக்கும் ஒரே மகன் ஜெயகுமார் பெயரில் சொத்தை எழுதி வைப்பதாக சொன்னார். நான் சொல்வதுபோல் ராமன் என்னை வழக்குரைஞரிடம் அழைத்து போகவும் இல்லை, உயில் எழுதுவதற்கான தகவலையும் ராமன் வழக்குரைஞரிடம் கொடுக்கவில்லை என்றால் தவறு. ராமன் என் முன்பாக கையெழுத்து செய்யவில்லை என்பதால்தான் அவர் தமிழில் கையெழுத்து போட்டாரா, இங்கிலிசில் கையெழுத்து போட்டாரா என்று எனக்கு தெரியவில்லை என்றால் நான் பின்னாடி நின்று கொண்டிருந்தேன், ராமன் முன்னாடி நின்று கொண்டு கையெழுத்து போட்டார். நான் சொல்வது

பொய்யானது என்றால் தவறு. ஜெயகுமார் எனக்கு வேண்டியவர் என்பதால் அவர்தான் என்னை தயாரித்து அழைத்து வந்தார் என்றால் சரியல்ல. ஜெயகுமார் கேட்டுக்கொண்டபடி நானும், முருகன் மற்றும் ஒரு பாய் ஆகிய இரண்டு பேர்களும் கையொப்பம் போட்டுள்ளோம் என்றால் சரியல்ல. அந்த பாய்-ன் பெயர் எனக்கு தெரியாது என்றால் சரிதான். இன்றைய தேதி வரை அவரின் பெயரை நான் தெரிந்து கொள்ளவில்லை என்றால் சரிதான். இந்த வாக்குமூலம் தயாரிக்கும்போதும் நான் பாய்-ன் பெயரை சொல்லவில்லை என்றால் சரிதான். என்னுடைய சாட்சி வாக்குமூலத்தில் யார் சொல்லி பாய்-ன் பெயரை போட்டு தயாரித்தது என்பது எனக்கு தெரியாது என்றால் சரிதான். பத்திரத்தில் இருந்த பெயரை வைத்து பன்னார்கள். ராமன் உயில் சாசனம் எழுதும் எண்ணத்தில் இருக்கவும் இல்லை, அவ்வாறு ஒரு உயிலும் எழுதவில்லை என்றாலும், ஜெயகுமார் கேட்டுக் கொண்டபடி நான் கையெழுத்து போட்டுவிட்டு அதன்படி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:</u>**

இல்லை.

Taken down by me in open Court interpreted/read over to the witness and acknowledged by him/her to be correct.

R VASANTHI

Principal District Judge
Digitally signed by R VASANTHI
Location: Krishnagiri

Principal District Judge,
Krishnagiri.